ஆயத்த அணிகல அங்காடி
(சுவர்ண மாளிகை)
போன்: 268
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
வைர நகை வியாபாரிகள்,
பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A. (U. S. A.) "விஷாரத்"
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்—மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

பிறகு என்ற பேச்சே வேண்டாம்!
ஏன் யோசிக்க வேண்டும்?
ஆர் அட்டி சொல்வார்கள்?
இன்றே
பி. ஏ. ஆர். & பிரதர்
சுவர்ண மாளிகைக்குச்
செல்வோம்!

இடி 2 | தமிழ் வாரச் செய்தித் தாள். 30-8-52 சனிக்கிழமை | ஒலி 6

ஞானி நாயுடு!

என்னய்யா நாயுடுவை ஞானியாராக்கிறீர்களே? என்பார்கள். சிலர் ஞானி என்றதும் நமக்கு துறவி, சாமியார் ஞாபகம் வரும். இன்னும் ஜெபமாலை கமண்டலை திரு ஓடு, நாரதர் குடுமி நினைவுக்குவரும், சினிமா பார்க்கும் இளைஞருக்கு பட உலகில் வந்து வந்து போகும் சாமியார்கள் நினைவு வரும். ஞானி என்றால் சாமியார் அல்ல! ஞானத்தைப்பெற்றவனுக்கு ஞானி என்று பெயர். ஞானம் என்பது அறிவு என்று பொருள். அறிவைப் பெற்றவர் அனைவரையும் ஞானி என்று அழைக்கலாம். இதை யாரும் ஆக்ஷேபனை செய்ய முடியாது. இது வரை எழுத்தாளர்கள் பேச்சாளர்கள் அனைவரும் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு என்று தான் எழுதியும் பேசியும் வந்தார்கள். நானும் அவ்வாறே எழுதியும் பேசியும் வந்தேன் விஞ்ஞானி என்று தம்மை அழைப்பது நாயுடுவுக்கு விருப்பமில்லை என்பது சில மாதங்களுக்கு முன்புதான எமக்குத் தெரியவந்தது. ஜி டி. நாயுடு வர்ழ்க்கை வரலாற்றைப் பற்றி நான் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறேன். அந்தப்புத்தகம் அச்சேருவதற்கு முன்னர் கைப்பிரதியாக இருக்கும் பொழுது விஞ்ஞானி ஜி. டி. நாயுடுஎன்று தலைப்பு கொடுத்து நாயுடு அவர்களின் பார்வைக்கு அனுப்பி திருத்தங்கள் செய்து கொடுக்க வேண்டினேன். அவர் முதலில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு என்ற தலைப்பில் உள்ள விஞ்ஞானி என்ற வார்த்தையை சிகப்பு பென்சிலால் அடித்திருந்தார். இதிலிருந்து விஞ்ஞானி என்று தம்மை அழைப்பதில் விருப்பமில்லை என்று தெரிந்துகொண்டேன். ஆனால் பிறகு எப்படி அழைப்பது? 'விஞ்' என்ற இரண்டெழுத்தை அடித்து விட்டு ஞானி என்று அழைக்கலாம். என்று எனக்

கைத்தொழில் கல்வி

அறிவுக் காட்சி.

கோபால்பாக்

கோயமுத்தூர்.

1—9—52 முதல் காலை 10 முதல் 12 வரை
15—9—52 வரை மாலை 2 முதல் 5 வரை

மத்திய சர்க்கார் தொழிலாளர் மந்திரி
கனம் ஸ்ரீ V. V. கிரி அவர்கள்
கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

சென்னை சட்டசபை சபாநாயகர்
கனம் ஸ்ரீ J. சிவஷண்முகம்பிள்ளை
அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்.

இயந்திர விஞ்ஞானம் எவ்விதம் குடிசைத் தொழிலில் நடமாடுகிறதென்பதையும், தொழில் கலை நுணுக்கங்களை எவ்விதம் குறுகிய காலத்தில் அறிந்து கொள்ள முடியும் என்பதையும், தெரிந்து கொள்ள இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

கோயமுத்தூர்,
24—8—52

ஜி. டி. நாயுடு,
President, I. L. W. A. Ltd.

குத் தோன்றுகிறது. ஞானி என்று அழைப்பதை யாருமே ஆட்சேபிக்க முடியாது என்று நினைக்கிறேன்.

நாயுடுவும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். ஞானி ஞானி என்று ஜி. டி. நாயுடுவை எல்லோரும் அழைக்கத்தொடங்கிவிட்டால் என்னை விஞ்ஞானி என்றுவது அழைத்துத் தொலையுங்களேன். என்று சொல்லும் வரையில் நாமும் 'ஞானி' என்று சொல்லிக்கொண்டேயிருப்போம்.

மனிதனுக்குத் தேவைப்பொருள்கள் மிகக் குறைவாக அந்தக்காலத்தில் இருந்தது. அதனால் அக்காலத்து மனிதன் தன்னைப் பற்றியும்., தன் ஆத்மாவைப்பற்றியும் தானே விசாரணை செய்து அதைப்பற்றிய ஞானத்தைப் பெற்றான். அவனை ஞானி என்று அழைத்தார்கள் அக்காலத்தவர்கள்.

இக்காலத்தில் மனிதனுக்குத தேவையான பொருள்கள் அதிகமிருக்கிறது. இந்தத் தேவைப் பொருள்களை கண்டு பிடிப்பதில் ஞானத்தைப் பெற்றவர்களை ஞானி என்று அழைப்பதில் குற்றமில்லை.

வைத்திய நூலுக்கு வழி வகுத்துக் காட்டிய போகரை ஞானி என்றால் வாழ்வுக்கு அத்தியாவசியமான மின்சாரத்தை கண்டு பிடித்த விஞ்ஞானியை ஞானி என்று அழைப்பதில் தவறொன்றுமில்லை.

மனையடி சாத்திரங்களை வரைந்த மகான்களை ஞானி என்றால் இன்று மாளிகை, பங்களாக்கட்ட பிளான் எழுதித் தரும் இன்ஜினீர்களை ஞானி என்று அழைப்பதில் குற்றமில்லை! ராமாயணம், மகாபாரதம் எழுதிய புலவர்களை ஞானி என்று அழைப்பதால் குடும்ப விளக்கு பாண்டியன் பரிசு முதலிய காவியங்கள் எழுதிய பாரதிதாஸனையும் ஞானி என்று தான் அழைக்கவேண்டும் இதுவரை ஒவ்வொரு கலையிலும் சிறந்தவர்களை ஞானி என்று அழைத்தோம். ஆனால் நாயுடுவோ பல்கலையில் சிறந்தவர். நாயுடு அவர்கள் மேல்நாட்டில் சுற்றுப்பிரயாணம செய்து கொண்டிருந்தபோது ஒருஊரில் வெகுநாள் கட்டமுடியாமல் பழுதாகிக்கிடந்த ஒரு யந்திரத்தைப் பார்த்தார். ஒரு விநாடியில் அந்தப் பழுதான யந்திரத்தைச் செப்பனிட்டு ஓட்டிக் காட்டினார். இதைப்பார்த்த மேல் நாட்டு (விஞ்) ஞானிகள் எல்லாம் திகைத்தனர் இப்பொழுது எங்கு பார்த்தாலும் தேர்தல் சூராவளி அடித்துக் கொண்டிருக்கிறது. ஓட்டுப் பெட்டி ஓட்டுப் போடும்முறை இவைகளில் எந்த மாறுதலும் இன்னும் நாம்பார்க்க முடியவில்லை. பண்டு தொட்டு இன்றுவரை அப்படியேதான் இருந்து வருகிறது சென்ற சட்டசபைத் தேர்தலில் ஒரு புதுவிதமான எஃகுப் பெட்டி வைத்திருந்தார்கள். அந்தப் பெட்டி நம்பிக்கைக்கு பாத்திரமானது என்று பத்திரிகைகளும் அரசாங்கமும்சொல்லிற்று. பூட்டியிருக்கும் பெட்டிக்குள் இருந்து ஓட்டுக்களை களவு செய்ய முடியாது என்று விளம்பரம் செய்யப்பட்டது. இதை மக்களும் நம்பினார்கள். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் யாரோ ஒருவர் பூட்டின பெட்டிக் குள்ளிருந்த ஓட்டுகளைத் தாராளமாக எடுத்துக் காட்டினராம், அப்பொழுதுதான் அந்தப்பெட்டி நாணயமில்லாத பெட்டி என்று தெரிய வந்ததாம், ஆனாலும் தேர்தல் நாணயமானதாம்! இது எப்படியோ இருக்கட்டும். பல வருடங்களுக்கு முன்னரே நாயுடு அவர்கள் தானாகப் ஓட்டுப்பதிவு செய்யும் யந்திரம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறார். இது மின்சாரத்தின் துணை கொண்டு இயங்குவதல்ல. பட்டன் அழுத்தும் முறை ஓட்டுப்போடும் நபர்கள் தாங்கள் விரும்பும் அபேக்ஷகரின் பெயருக்குப் பக்கத்தில் உள்ள பட்டனை அழுத்தி விட்டால் அது நம்பரைத்தானாக குறித்துக் கொண்டு வரும். ஒருவர் இரண்டு முறை அழுத்தி ஏமாற்ற முடியாத அமைப்பு தேர்தல் நடந்த மறுநிமிடமே அபேக்ஷகர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை வெளியிட்டு விடலாம். இந்த யந்திரத்தை ஜி. டி. நாயுடு அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினையின் பேரில் தம் பங்களாவுக்கு வரும் விருந்தினர்களின் அபிப்பிராயத்தை வேடிக்கையாக ஓட் எடுத்துக் காண்பிப்பார். இந்த மாதிரி நாயுடு அவர்கள் இதுவரை சுமார் 72 யந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்

கரியிலிருந்து செயற்கை வைரம் செய்கிறார் சர். சி. ராமன் என்று யாருக்குமே தெரியாது. ஒரு தடவை சர். சி வி. ராமன் நாயுடு அவர்கள் நடத்தும் பள்ளி ஹாஸ்டலுக்கு விஜயம் செய்திருக்கிறார். அப்பொழுது மாணவர்கள் சி. வி. ராமனை கரியிலிருந்து வைரம் செய்யும் முறை எவ்வாறுஎன்று கேட்டனர். உடனே நாயுடு அவர்கள் அந்தத முறையை விளக்கிக் காட்டினார். இதைப் பார்த்த சர். சி. வி. ராமன் அதிசயப்பட்டாராம். நாயுடு அவர்களின் மேதையைப் பற்றி பாராட்டும் பொழுது சர். சி. வி. ராமனே இதை வியந்து கூறுகிறார்.

பழமை அனைத்தையும் சிலர் வெறுப்பார்கள். புதுமை அனைத்தையும் சிலர் விரும்புவார்கள். தாஜ்மகால் பழையது தான் அதனால் அதை வெறுக்கமுடியுமா? அதில் உள்ள சிற்பக் கலையைப் புறக்கணிக்கமுடியுமா? தாய் தந்தையர்களும் பழைமையானவர்களே அதனால் அவர்களை வெறுக்கமுடியுமா? புதிது புதிதாப் போதை தரும் எஸ்ஸென்கள் நாட்டில் அதிகமாக இப்பொழுது நடமாடி வருகிறது, அதனால்புதுமை என்ற முறையில் ஆதரிக்கமுடியுமா? புது முகங்கள் நம்மைப் பூரிக்கத் தான் செய்யும அதை விரும்பலாமா? புதிய ஆட்டுத் தோல் வேலைக்குப் பயன்படுமா? புதிய ஊறுகாய் நாவுக்குச் சுவைதருமா? புதிய தங்கம் மதிக்கப் படுகிறதா? இல்லையே. ஆகவே பழமை முழுதும் வெறுப்பதும் புதுமை முழுதும் ஆதரிப்பதும் விவேகமல்ல.

பழமை என்பதற்காக வாடியமலர், கருகிய மொட்டு, அழுகிய பழத்தை விரும்பமுடியுமா? விரும்பமாட்டோம்! பழமையில் உள்ள நல்லனவற்றை ஏற்று அல்லன வற்றை நீக்கி புதுமையில் உள்ள கொள்வன கொண்டு, தள்வன தள்ளி நேர்மையில் சொல்வதுதான் அறிஞர்களின் கடமை.

கண்ணன்
பிராண்டு டீ
ருசி மிகுந்தது.
எல்லா ஊர்களிலும்
ஏஜண்டுகள் தேவை.
கண்ணன் டீ கம்பெனி
கிணத்துக்கடவு.

ஒரு சமயம் நாயுடு பங்களாவில் சித்தவைத்தியர் மாநாடு ஒன்று நடைபெற்றது. நாயுடு அவர்களிடம் சித்த வைத்தியர்கள் சித்த வைத்தியத்தின் பெருமையைக் கூறிய பொழுது உடனே நாயுடு அவர்கள் தம்மிடம் உள்ள சித்த வைத்திய நூற்களைக் காட்டினார்கள். கணக்கில் அடங்காத அந்த நூற்களைப் பார்த்து சித்தவைத்தியர்கள் மலைத்து விட்டனர். அப்பொழுதுதான் நாயுடு அவர்கள் சித்த வைத்தியரில் பெரும் ஆராய்ச்சியுடையவர் என்று தெரிய வந்தது அது மாத்திரமல்ல! நமது நாட்டு வைத்திய முறை அதிசயங்களை மேலை நாடு அதிசயக்கும்படி காட்டியது நாயுடு ஒருவரே. கைகால்களின் எலும்பு முறிவை தைலப் பூச்சினால் ஒன்று சேர்த்தும் அதிசயத்தை மேல் நாடு வியக்கும்படி செய்து காட்டியிருக்கிறார். அதே சமயத்தில் மேல் நாட்டுமருத்துவ முறையை வெறுப்பவர் அல்ல. மேலை நாட்டில் இருக்கின்ற புதிய மருத்துவ முறைகளை இந்த நாட்டில் புகுத்துவதற்கு அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிறார். யந்திரம் மருத்துவம், தாவரம் ஆகிய பலகலையில் நிபுணர்தான் நமது விஞ்ஞானி ஜி. டி. நாயுடு ஓ! ஹா! விஞ்ஞானி என்று தவறிச்சொல்லி விட்டேன். மன்னிக்கவேண்டும் ஞானி ஜி. டி. நாயுடு.

வைரமொழிகள்.

“கைத்தொழிலில் இந்தியா புரட்சிகரமான மாறுதலைப் பெறவேண்டும். இல்லையேல் வறுமையை ஒழிக்க முடியாது”

“மேலை நாட்டிலிருந்து ஒரு வருடத்திற்கு இறக்குமதியாகும் யந்திரத்தின் மொத்த மதிப்பு ரூபாயை, முன் கூட்டி மூலதனமாகப் போட்டு இந்த நாட்டில் கைத்தொழிலை ஆரம்பித்தால், இறக்குமதியாகும் எல்லா யந்திரங்களையும் இந்த நாட்டில் உற்பத்திசெய்யலாம்”

கட்டுப்பாடுடனும், ஒழுங்காகக் காலத்தை விரயம் செய்யாமல் சலியாது உழைத்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்

ஜி. டி. நாயுடு.

நல்ல யோசனை!

யந்திரத்தினால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றியதாம்! ரைஸ்மில் யந்திரம் வந்ததால் உரல் உலக்கைகொண்டு அரிசி குத்திப் பிழைக்கும் கிராம மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்று அங்கலாய்க்கிறார்கள் நமது தேசபக்தர்கள். அவ்வாறாயின் உரலும் உலக்கையும் யந்திரம்தானே! எல்லாருக்கும் வேலை கிடைக்கவேண்டுமானால் ஒரு படி நெல்லை பத்துப் பேருக்குப் பகிர்ந்து கொடுத்து கையினால் விரல்கொண்டு உரித்துக் கொண்டிருக்கச் சொன்னால் பத்துப் பேருக்கும் வேலை கிடைக்குமல்லவா? உரலும் உலக்கையும்கூட ஒழிந்து விடலாமல்லவா?

அதிசயம்!

மதம் பிடித்த யானையை மனிதன் அடக்கி விடுகிறான். ஆனால் அந்த மனிதனை ஒரு சாதாரணப் பெண் அடக்கி விடுகிறாள். என்ன அதிசயம்!

அனுபவம்!

நமது வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கும் உறவினர், நமது வீட்டுப் பொருளைத் திருடிக்கொண்டால் அதை வெளியில் சொல்லக்கூடாது. சொன்னால் திருட்டுப்போன பொருளுக்கு வட்டியாக வசவும் திட்டும் தான் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

ஜி. டி. நாயுடு

(வாழ்க்கை வரலாறு)

வெளிவந்துவிட்டது.

தனிப்பிரதி அணா 0—4—0

விற்பனையாளர்களுக்கு 25% கமிஷன் உண்டு.

‘இடி’ பிரசுராலயம், தாராபுரம்.

குயில் மார்க் பீடி

குயில் மார்க் P.A.R.

ரிஜிஸ்டர் நெ. 1178.

பல்லடம். கீழ ஏரல்

TRADE MARK.

P.A. ரஹீம் சாயபு.

பீடிகளில் சிறந்தது

‘பால குடோரி’

‘பால சஞ்சீவி’

குழந்தைகளுக்குரிய சகல நோய்களுக்கும் நிவாரணி.

தங்கப் பஸ்பம்

மன்மத குளிகை

தாதுவிருத்திக்கு அரசன்.

விபரங்களுக்கு:—

மலையப்பசாமி வைத்தியசாலை

பழனி S. I.

All India Competitions

INDIA'S BEST CLUES COMPETITIONS

Rs. 30,000

முடிவு தேதி 9—9—52

பிரவேசக் கட்டணம் ஆறு அணுதான்.

★

இன்றே கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

எங்கும் கலெக்டர்கள் தேவை

முக்கிய நகரங்களில்
டிப்போக்கள் உண்டு

★

ஏராளமான நகரங்களில்
கலெக்டர்கள் உண்டு.

ஆல் இந்தியா காம்படிஷன்ஸ்

6/A, டாடாபாத், கோயமுத்தூர்.

ஆசிரியர், வெளியிடுபவர்:— பண்டிட் ஜெயிலானி விஷாரத், தாராபுரம். அச்சிட்டது:- ராயல் பிரஸ், கோயமுத்தூர்.